DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO. 600020/2019

Deposition of Lw1 examined as Pw1 Dt. 03.03.2026

| | |
|---|---|
| Name | சீனிவாசன் |
| Father's Name | பாலசுப்பிரமணியன் |
| Village | மயிலாடுதுறை |
| Age | 63/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 03.03.26

( A1 to A3 present)

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஓரியன்டல் மற்றும் சோழமண்டலம் Insurance company ல் ஏஜெண்டாக பணி புரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2017 ம் வருடம் மாதம், தேதி நினைவில் இல்லை. காலை 08.00 மணி அளவில் நான் விற்ற இடத்தில் காம்பவுண்ட் போடுவதற்காக நிறைய ஆட்கள் வந்திருந்தார்கள். அவர்களில் யார் என்னை திட்டி, தாக்கினார்கள் என்று தெரியவில்லை. எதிரிகளுக்கும் எனக்கும் சொத்து சம்பந்தமான முன் விரோதம் இருந்ததால் எதிரிகள் தான் மேற்படி செயலை செய்திருப்பார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் புகார் கொடுத்துவிட்டேன். அதில் உள்ள விபரங்களை நான் எழுதவில்லை. தற்போது நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எதிரிகளுடன் சமாதானமாக சென்று விட்டேன் என்று சொனனால் சரிதான். நான் கொடுத்த புகார் மனுவின் மீது மேல் நடவடிக்கை எடுக்கவிரும்பவில்லை என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 14.12.2017 ம் தேதி காலை 08.00 மணி அளவில் நான் விற்ற இடத்தில் காம்பவுண்ட் போடுவதற்காக நிறைய ஆட்கள் வந்திருந்தார்கள். அவர்களிடம் எதிரிகள் என்னை வரச்சொன்னார்கள் என்றும், அதனால் நான் சம்பவ இடத்திற்கு வந்த போது எதிரிகள் என்னை கெட்ட வார்த்தையால் திட்டி தேங்காய் உறிக்கும் பாறையால் எனது வலது கையில் குத்தியும், கல்லால் அடித்தும், சொற்பகாயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் மேற்படி குற்ற சம்பவம் குறித்தான புகார் மனுவினை கொடுத்து விட்டு

போலிஸ் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் அவர்களுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை

என்னால் எழுதிக் கொள்ளப்பட்டு, எதிரி முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

3/3/26

நீதித்துறை நடுவர் எண் I
மயிலாடுதுறை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO. 600020/2019

Deposition of Lw3 examined as Pw2 Dt. 03.03.2026

| | |
|---|---|
| Name | சுந்தரமூர்த்தி |
| Father's Name | மாரியப்பன் |
| Village | பொன்னூர் |
| Age | 39/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 03.03.26

( A1 to A3 present)

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 14.12.2017 ம் தேதி காலை 08.00 மணி அளவில் அ.சா.1 அவர் விற்ற இடத்தில் காம்பவுண்ட் போடுவதற்காக நிறைய ஆட்கள் வந்திருந்தார்கள். அவர்களிடம் எதிரிகள்அ.சா.1 ஐ வரச்சொன்னார்கள் என்றும், அதனால் அ.சா.1 சம்பவ இடத்திற்கு வந்த போது எதிரிகள்அவரை கெட்ட வார்த்தையால் திட்டி தேங்காய் உறிக்கும் பாறையால் அவரது வலது கையில் குத்தியும், கல்லால் அடித்தும், சொற்பகாயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் மேற்படி குற்ற சம்பவத்தினை நான் நேரில் பார்த்தேன் என்று போலிஸ் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை

x Sundaramurthy

என்னால் எழுதிக் கொள்ளப்பட்டு, எதிரி பின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

3/3/26

நீதித்துறை நடுவர் எண் I

மயிலாடுதுறை